දුරකථන/தொலைபேசி இல./Telephone Nos.

අමාත්‍යතුමා / அமைச்சர் / Minister: 2784832, 2784807, 2785617

ලේකම් / செயலாளர் / Secretary: 2784812

කාර්යාලය / அலுவலகம் / Office: 2785141-50, Fax: 2784846

ඊමේල්/ஈ-மெயில்/E-mail : isurupaya@moe.gov.lk

ඔබේ අංකය / உமது இல. / Your No. ........................................

අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

ඉසුරුපාය பாடசாலை செயற்பாட்டு மற்றும்
බත්තරමුල්ල ...யார் பாடசாலை

"இசுருபாயா"
பத்தரமுல்ல.

"Isurupaya"
Battaramulla.

මගේ අංකය / எமது இல. / My No. ஈடி/01/12/01/07/01

දිනය / திகதி / Date 2005.03.17


**சுற்றறிக்கை இல: 2005/08**

சகல மாகாண கல்வி செயலாளர்கள்,
சகல மாகாண கல்விப் பணிப்பாளர்கள்,
சகல தேசிய பாடசாலை அதிபர்கள்,

## மாணவர்களுக்கு உதவிப்பணம் மற்றும் பாடசாலை பெற்றுக்கொடுப்பதற்காக நடாத்தப்படும் 5ம் தர புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் வழங்கப்படும் புலமைப் பரிசில் கொடுப்பனவுத் திட்டத்தை மறுசீரமைத்தல்

1989 நவம்பர் மாதம் 08ம் திகதி கொண்ட இலக்கம் 2/பாசெ 4/241 கொண்ட கடிதம் மூலம் பாடசாலைகளில் 6ம் தரம் முதல் 13ம் தரம் வரை கற்கும் மாணவர்களுக்காக 1983 முதல் கொடுக்கப்படும் ரூபா 1000 வருடாந்த புலமைப்பரிசில் கொடுப்பனவு 1989 ஜுலை மாதம் 01ல் திகதி முதல் செயற்படும் வகையில் ஒரு ஆண்டிற்கு 10 மாதகால எல்லை வரை ரூபா 2400ஆக அதிகரிக்கப்பட்டது. இருப்பினும் 1989 ஜுலை மாதம் முதல் செலுத்தப்படும் இக்கொடுப்பனவு தற்போதைய சமூக பொருளாதார நிலைமைக்கு பொருந்தாது என்பதனால் கொடுப்பனவை அதிகரிக்குமாறு கோரிக்கைகள் பல கிடைத்துள்ளன.

இது தொடர்பான கோரிக்கைகளைக் கருத்திற்கொண்ட கௌரவ கல்வி அமைச்சர் தற்பொழுது 5ம் தர புலமைப் பரிசில் பெறுவோருக்கு ஒரு ஆண்டிற்கு 10 மாதங்களுக்காக செலுத்தப்படும் ரூபா 2400 புலமைப் பரிசில் கொடுப்பனவு இக்காலத்திற்காக ரூபா. 5000 வீதம் அதிகரிக்க அமைச்சரவைக்கு யோசனை சமர்ப்பிக்கப்பட்டு. 2004.09.15ம் திகதி கொண்ட இலக்கம் 04/1183/035/038 என்ற அமைச்சரவை பத்திரம் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட இவ்யோசனைக்கு அமைச்சரவையினால் 2004.09.24ம் திகதி அங்கீகாரம் வழங்கப்பட்டது.

இதனடிப்படையில் 2005ம் ஆண்டு 6ம் தரத்திற்கு சேர்த்துக் கொள்ளப்படும் புலமைப்பரிசில் தாரர்கள் உட்பட தற்பொழுது 13ம் தரம் வரையான வகுப்புகளில் கல்வி கற்கும் 5ம் தரம் புலமைப் பரிசில்தாரர்களுக்கு மாதாந்தம் செலுத்தப்படும் ரூபா. 240 புலமைப் பரிசில் தொகை ரூபா 500ஆக இத்தால் அதிகரிக்கப்படுகின்றது.

இதனடிப்படையில் தற்பொழுது ஒரு ஆண்டிற்கு 10 மாத கால எல்லைக்காக செலுத்தப்படும் ரூபா 2400/- பணம் 2005 ஜனவரி மாதம் முதல் ரூபா 5000/-ஆக அதிகரிக்கப்படும்.

இவ்அதிகரிப்பிற்கு அமைய 2005 ஜனவரி மாதம் 01ம் திகதி முதல் புலமைப் பரிசில் தாரர்களுக்காக மாதாந்தம் ரூபா 500 வீதம் செலுத்த நடவடிக்கை எடுக்குமாறு தயவாய் அறியத் தருகிறேன்.

மேலும் இப்புலமைப் பரிசில் கொடுப்பனவு செலுத்த வேண்டியது தங்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் குறைந்த வருமானம் பெறும் பெயர்ப்பட்டியலில் பெயர் கொண்ட மாணவர்களுக்கு மாத்திரமாகும். வருடாந்த வருமான எல்லை 2002.08.15ம் திகதி கொண்ட 2002/20 மற்றும் 2004.04.27 திகதிய 2004/15 கொண்ட சுற்றறிக்கை மூலம் ரூபா 24000 வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

டாக்டர் தாரா டி மெல்
செயலாளர்,
கல்வி அமைச்சு.

பிரதிகள்:
1. சகல வலயக் கல்விப் பணிப்பாளர்கள்
2. சகல வலயக் கல்விக் கணக்காளர்கள்
3. சகல கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள்

*tb/mydocuments/g1/nustruth1/5th year scholorship*